29069

All CEO's

01

நாள்: 09.04.2022

அனுப்புதல்:


இரா. கல்யாணசுந்தரம்,
எண். 6, தபதி தெரு,
தரமணி,
சென்னை – 600 113.

செல்: 96269 64983


12/4/22

(112)

பெறுதல்:

பொது தகவல் அலுவலர்,
பள்ளிக் கல்வி ஆணையர் அலுவலகம்,
DIP வளாகம்,
நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 084.

ஐயா,

பொருள்: தகவல் உரிமைச் சட்டப்பிரிவு 6-இன்கீழ் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் – தொடர்பாக.

---

தமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறையின்கீழ் தமிழகம் முழுவதும் செயல்பட்டு வரும் அரசு/அரசு உதவி பெறும்/தனியார் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படும் மொழிப் பாடங்கள் குறித்த கீழ்க்கண்ட தகவல்களை எனக்கு தகவல் உரிமைச் சட்டப்பிரிவு 6-இன் கீழ் வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

1. தமிழகத்தில் செயல்பட்டு வரும் அரசு/அரசு உதவி பெறும்/தனியார் பள்ளிகளின் எண்ணிக்கையைத் தனித்தனியே வழங்கிடுக.

2. அத்தகைய பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படும் மொழிப்பாடங்கள் (Language Subjects) யாவை என்பதையும் பட்டியலிட்டு வழங்கிடுக.

3. மேற்குறிப்பிட்ட பள்ளிகளில் எந்த வகுப்பிலிருந்து எந்த வகுப்பு வரை மொழிப்பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன என்ற தகவலை வழங்கிடுக.

4. மேற்குறிப்பிட்ட பள்ளிகளில் கற்பிக்கப்படும் மொழிப்பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கையை மொழிப்பாடங்கள்-வாரியாக வழங்கிடுக.

5. மேற்குறிப்பிட்ட பள்ளிகளில் கற்பிக்கப்படும் மொழிப்பாடங்களில் எத்தகைய வகையில் தேர்வு நடத்தப்படுகிறது என்ற தகவலையும், தேர்ச்சி மதிப்பெண், தேர்ச்சி விழுக்காடு ஆகியவற்றை மொழிப்பாடங்கள் வாரியாக வழங்கிடுக.

6. மேற்குறிப்பிட்ட பள்ளிகளில் கற்பிக்கப்படும் மொழிப்பாடங்களில் எந்த மொழியில் தேர்வு நடத்தப்படும் என்ற தகவலை மொழிப்பாடம்-வாரியாக வழங்கிடுக.

7. ஒரு மொழிப்பாடத் தேர்வில் எந்த மொழியில் பதில் எழுத அனுமதிக்கப்படுகிறது என்ற தகவலை வழங்கிடுக. (எ.கா. தமிழ் மொழிப்பாடத்திற்கு தேர்வு தமிழில் மட்டுமே எழுத வேண்டுமா? அல்லது வேறு மொழிகளில் எழுத அனுமதி உண்டா?)

8. ஹிந்தி மொழிப்பாடத் தேர்வில் தமிழ் மொழியில் பதில் எழுத அனுமதிக்கப்படுகிறதா? என்ற தகவலை வழங்கிடுக.

9. சமஸ்கிருத மொழிப்பாடத் தேர்வில் சமஸ்கிருத மொழியில்தான் பதில் அளிக்க வேண்டுமா? என்ற தகவலை வழங்கிடுக.

10. சமஸ்கிருத மொழிப்பாடத் தேர்வில் பிற மொழியில் பதில் எழுத அனுமதி வழங்கப்பட்டிருப்பின், அவ்வாறான அனுமதி எத்தனை ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது? என்ற தகவலை வழங்கிடுக.

11. சமஸ்கிருத மொழிப்பாடத் தேர்வில் தேர்ச்சி மதிப்பெண் மற்றும் தேர்ச்சி விழுக்காடு எத்தனை? என்ற தகவலை வழங்கிடுக.

மேலே கோரப்பட்டுள்ள தகவல்களை தகவல் உரிமைச் சட்டப்படி இயன்ற விரைவில் சட்டம் குறிப்பிட்டுள்ள 30 நாட்களுக்குள் அளித்திடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

விண்ணப்பக் கட்டணம் ரூ.10/- நீதிமன்ற வில்லையாக ஒட்டி செலுத்தப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

இப்படிக்கு,

[signature] 09/04/22